
# எருசலேமில் உள்ள ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு கிரேக்க கிறிஸ்தவர்கள் உதவினர்

**எங்கெங்கு வாழ்ந்தாலும் மக்களுடைய தேவைகளை சந்திக்க பிள்ளைகளுக்கு போதிக்கவும்**



**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, தேவை உள்ள மக்களுக்கு நாங்கள் சேவை செய்யும் போது ஞானமாகவும் தாராளமாகவும் இருக்க எங்களுக்கு உதவுவீராக."

வயதுக்கும் தேவைகளுக்கும் பொருத்தமான சிறுவர்களுக்குரிய கல்வி-செயல்பாட்டைத் தெரிந்து கொள்க.

கிறிஸ்துவுக்குள்ளான ஏழை சகோதர சகோதரிகளுக்கு கொரிந்தியர்கள் எவ்வாறு உதவினர் என்பதை ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ கூறட்டும்.

**பின்னணி:** பவுல் மிஷனரியாக பணியாற்றிக் கொண்டிருந்த போது பஞ்சத்தின் காரணமாக எருசலேமில் உள்ள விசுவாசிகள் பசியாய் இருப்பதைக் கேள்விப்பட்டார். இந்த மக்களுக்கு உதவி செய்யும்படி அவர் பிற நாடுகளில் உள்ள விசுவாசிகளிடம் கேட்டுக் கொண்டார்.

இந்த கொடுத்தல் திட்டம் மிகவும் பெரிது. நீண்ட நாட்கள் பல சபைகள் இதற்காகப் பணத்தை சேர்த்தன. விசுவாசிகளும் அவை சரியான நபருக்கு போய்ச்சேரும்படி கவனித்துக் கொண்டனர். எருசலேமில் பட்டினியாய் இருந்த கிறிஸ்தவர்களின் தேவையைப் பூர்த்தி செய்தனர்.

தங்கள் காணிக்கையை சேகரித்தல் குறித்து பவுல் அப்போஸ்தலர் கொரிந்தியர்களுக்கு எழுதியதை மனப்பாடமாகக் கூறலாம் அல்லது வாசிக்கலாம் (1 கொரி. 16:1-4). பின் கேட்க வேண்டியவை:

- கொரிந்து சபை தவிர வேறு எந்த சபைகள் ஏழைகளுக்காக கொடுத்தன? (1)
- விசுவாசிகள் எந்த வகையில் பணம் சேர்க்க வேண்டும்? (2)
- எல்லா காணிக்கையையும் மக்கள் ஒரே நேரத்தில் கொடுத்தனரா? (2)
- எவ்வாறு பணம் அனுப்பப்படுகிறது என்பதை சபை எவ்வாறு கவனமாக மேற்பார்வை செய்தது? (3)
- பவுலின் கருத்துப்படி இக்காணிக்கை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? (4 பவுல் புதிய சபைகளை ஸ்தாபிப்பதில் பரபரப்பாய் இருந்தார். அதே நேரத்தில் எருசலேமில் கஷ்டப்படுகிறவர்களுக்காக நேரம் ஒதுக்கி அக்கறை எடுத்துக் கொண்டார். சேர்க்கப்படும் காணிக்கை சிறந்த முறையில் நிர்வாகிக்கப்படுகிறதா என்பதையும் நிச்சயப்படுத்திக் கொண்டார்).

கொடுக்கும்படியான தன் வேண்டுகோளுக்கு விசுவாசிகள் எவ்விதம் மதிப்பளிக்கின்றனர் என்பது பற்றி பவுல் கொரிந்தியர்களுக்கு என்ன கூறினார் என்பதை விளக்குக.

- பவுல் இரண்டாம் கடிதத்தை அவர்களுக்கு எழுதி நிறைய பேர் தாராளமாய்க் கொடுத்ததை கூறுகிறார் (2 கொரி 8:1-7, 10-11 & 19-21).
- கிரேக்க நாட்டிற்கு வடக்கில் உள்ள ஒரு சிறிய தேசம் மக்கதோனியா. இங்குள்ள ஏழை விசுவாசிகள் தியாகப்பூர்வமாக கொடுத்தனர்.
- ஏழை மக்கதோனியர்கள் அப்போஸ்தலர்களிடம் தாங்களும் கொடுப்பதாக வருந்திக் கேட்டுக் கொண்டனர்.
- கொரிந்தியர்கள் ஒவ்வொரு வாரமும் கொஞ்சம் கொடுத்து, அப்போஸ்தலர்கள் எருசலேம் கொண்டு செல்ல பிரித்து வைத்தனர்.
- சந்தேகத்தைப் போக்க, மிகவும் நம்பிக்கை உள்ள மனிதர்களிடம் தங்கள் காணிக்கையை எருசலேம் கொண்டு செல்லும் பொறுப்பை ஒப்படைக்குமாறு கூறினார்.

- காணிக்கையின் நோக்கம் பட்டினியில் இருப்போருக்கு உணவு அளிப்பதோடு தேவனை மகிமைப்படுத்துவதும் ஆகும்.

"மாபெரும் காணிக்கை" என்ற கதையின் சில பகுதிகளை நாடகமாக்குக. பெரிய பிள்ளைகள் சிறியவர்களுக்கு உதவட்டும்.

- சபைத்தலைவரோடு பேசி குழந்தைகள் ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்கு நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்யவும்.
- கதை கூறுபவர், பவுல், தீத்து, எதிரி ஆகிய வேடங்களை பெரியவர்கள் அல்லது பெரிய பிள்ளைகள் ஏற்கட்டும். கதை கூறுபவர் கதை சுருக்கம் கூறி, குழந்தைகள் பேச/நடிக்க ஞாபகப்படுத்துபவர்.
- ஏழை மக்கள், கொரிந்தியர்கள், மக்கதோனியர்கள் ஆகிய வேடங்களை சிறிய பிள்ளைகள் ஏற்கட்டும். கொரிந்தியர்கள் காணிக்கை போட நாணயங்கள் அல்லது சிறு கற்களை வைத்துக் கொள்ளட்டும்.

**கதை கூறுபவர்:** கதையின் முதல் பகுதியைக் கூறவும் (1 கொரி. 16:1-4). பின் கூறுவது, "எருசலேமில் உள்ள ஏழை மக்கள் கூறுவதைக் கேளுங்கள்."!

**ஏழை மக்கள்:** "விளைச்சல் கெட்டுவிட்டது" "ஒரு வருஷத்துக்குள் நாங்கள் பட்டினி கிடந்தே செத்துப் போய் விடுவோம்" "கடவுள் நமக்கு உதவி செய்யட்டும்."

**கதை கூறுபவர்:** "இதே சமயத்தில், தொலைதூரத்தில் கொரிந்து பட்டிணத்தில் இருக்கும் பவுல் கிறிஸ்தவர்களிடம் கூறுவதைக் கேளுங்கள்!"

**பவுல்:** "நாம் எருசலேமில் பட்டினியாய் இருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஒவ்வொரு வாரமும் கொஞ்சம் பணத்தைத் தனியாகப் பிரித்து வைத்து, ஞாயிறு அதை காணிக்கையாகக் கொடுங்கள். சில நாள் கழித்து நான் வந்து காணிக்கையை பெற்றுக் கொள்வேன்."

**கதை கூறுபவர்:** "கிறிஸ்துவின் எதிரி தன் உதவியாளர்களாகிய பிசாசிடம் கூறுவதைக் கேளுங்கள்."

**எதிரி:** "இல்லை! சபைகள் எல்லாம் ஒத்துழைக்கின்றன. அவர்கள் ஒன்று சேர்ந்து பணியாற்றுவதைப் பிசாசுகளாகிய நாம் தடுக்க வேண்டும். அவர்கள் நிறைய கொடுக்கிறார்கள். ஒருவருக்கொருவர் உதவி செய்கின்றனர். அவர்களை நாம் அதைரியப்படுத்த வேண்டும்."

**கொரிந்தியர்கள்:** காணிக்கையை சேகரிக்க ஒரு பெட்டியை அனுப்புகின்றனர். அவர்கள் கூறுவது: "நாம் ஒவ்வொரு வாரமும் கொஞ்சமாவது கொடுக்க முடிவதால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்." "நான் என் கோழி போடும் ஒரு முட்டையை சேர்த்து வைத்து விற்ற பணம். இதோ காணிக்கை." "நான் சில துணிமணிகளை செய்து விற்ற பணம்."

**எதிரி:** கால்களை கோபமாக உதைத்து: "அவர்கள் நிறைய பணம் திரட்டுவதை நம்மால் தடுக்க முடியவில்லை. எனவே பண விஷயத்தில் நாம் அவர்களை அலட்சியமாய் இருக்க வைப்போம். அதை எருசலேம் கொண்டு போகிற மனிதர்கள் மேல் சந்தேகத்தை வரவழைப்பேன். அவர்கள் அதில் கொஞ்சம் திருடலாம் அல்லவா?"

**கொரிந்தியர்கள்:** இரண்டு பேரை சுட்டிக் காட்டி "நீங்கள் இருவரும் பணத்தைக் கையாள வேண்டும்." "அதைக் கொண்டு போகும் உங்கள் மேல் எங்களுக்கு நம்பிக்கை உண்டு." "நாங்கள் கொடுக்கும் எல்லாவற்றிற்கும் கவனமாக கணக்கு வையுங்கள்."

**கதை கூறுபவர்:** கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும். "நீண்ட நாள் கழித்து பவுல் மக்கதோனியா வருகிறார். மக்கதோனியர் கூறுவதைக் கேளுங்கள்."

**மக்கதோனியர்கள்:** "பவுல், நமது சகோதர சகோதரிகள் எருசலேமில் பஞ்சத்தால் வருந்துவதாகக் கூறினீர்கள்" "நாங்கள் ஏழைகள்தான். இருந்தாலும் உதவி செய்ய விரும்புகிறோம்." "கொரிந்தியர்கள் கொடுப்பது போல நாங்களும் பெரிய காணிக்கையைத் தர விரும்புகிறோம்."

**பவுல்:** "தேவன் உங்கள் தியாகத்தையும் தாராளத்தையும் ஆசீர்வதிப்பாராக. நான் உங்கள் காணிக்கைகளைப் பெற தீத்துவை அனுப்புவேன்."

**கதை கூறுபவர்:** "கொரிந்து சபைக்கு தீத்துவும் போகிறார். அவர் கூறுவதைக் கேளுங்கள்!"

**தீத்து:** “எல்லா சபைகளும் சேர்ந்து ஆரம்பித்த இந்த பெரிய திட்டத்தை முடித்து வைப்பத்தில் நீங்கள் மகிழ்வீர்கள். உண்மையுள்ள வேறு சகோதரர்களுடன் நான் காணிக்கைக்காக வந்துள்ளேன். அதை எருசலேமுக்கு எடுத்துச் செல்ல எங்களோடு வரும்படி உங்களிடம் ஆட்கள் இருக்கிறார்களா?”

**கொரிந்தியர்கள்:** “எருசலேமில் உள்ள மக்களுக்காக எங்களால் இயன்ற பணத்தை நாங்களும் தர விரும்புகிறோம். இந்த இருவரும் நம்பிக்கையானவர்கள். அவர்கள் உங்களோடு வருவார்கள்.”

(ஏழை மக்களிடம் பரிசுகளைத் தருகின்றனர்).

**ஏழை மக்கள்:** “ஓ! தேவனுக்கு நன்றி இனி நாம் பட்டினி கிடந்து சாக மாட்டோம்.”

**எதிரி:** “நாம் தோற்று விட்டோம். அவர்கள் சந்தேகம் வராதபடி ஞானமாய் பணத்தைக் கொடுத்து விட்டனர். நான் மீண்டும் முயற்சி செய்வேன்!”

**கதை கூறுபவர்:** உதவியவர்களுக்கு நன்றி கூறவும்.

இந்த பாடத்தின் ஆரம்பத்தில் உள்ள கேள்விகளை பிள்ளைகள் பெரியவர்களிடம் கேட்கவும்.

**கலந்துரையாடல்:** தேவனுக்கு சேவை செய்ய சபைகள் இணைந்து செய்யக்கூடிய வேறு திட்டங்களுக்கு உதாரணங்கள்.

- பெரிய பிள்ளைகள், வருவாய் செலவு ஆகிய தலைப்புகள் உள்ள ஒரு கணக்கு புத்தகத்தின் படத்தை வரையலாம்.
- வருவாய் என்பதற்கு கீழ், ஏழைகளுக்காக வாங்கக் கூடிய பொருளை எழுதுக.

சிறுவர்கள், நாணயத்தை வைத்துக் கொண்டிருக்கும் ஒரு கரத்தின் படத்தை வரைக (மேலே உள்ள படத்தைப் பார்க்க).

- ஆராதனை வேளையில் பெரியவர்களுக்குப் படத்தைக் காட்டி மிகவும் தேவையில் உள்ள மக்களுக்கு உதவும் பொருட்டு எவ்வாறு சபைகள் ஞானமாகவும், தாராளமாகவும் இணைந்து பணியாற்றுகின்றன என்று விளக்கவும்.

**மனன வசனம்** 1 கொரி 9:6.

**கவிதை:** நீதிமொழிகள் 24:3-6 வசனங்களை நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

**ஜெபம்:** கர்த்தாவே, நீர் எங்களுக்கு பல நன்மைகளைத் தருகிறீர். நாங்கள் இல்லாதவர்களுக்கும் தூர தேசத்திற்கு உமது சுவிசேஷத்தைக் கொண்டு போகிறவர்களுக்கும் கொடுக்க விரும்புகிறோம். எங்கள் சொத்துக்களை கொண்டு உம்மை கனப்படுத்த இணைந்து பணியாற்ற உதவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net